**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தேனி மாவட்டப் பேரூராட்சிகளில் 1998–1999 முதல் 2005–2006ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களில் மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 20 சதவிகித ஒதுக்கீட்டின்படி இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் நேரடி பணிநியமனம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை**

அரசாணை (நிலை) எண். **111** நாள்: **09.06.2010**

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.08.1998.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் எண்.3902/2008/அ2, நாள் 17.07.2008.
3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண். 6888/சிடி–பி2/2008, நாள் 11.05.2010.

********

**ஆணை**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் வரித்தண்டலர்கள் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 விழுக்காட்டிற்கு மிகாத பணியிடங்களில் அனைத்து அரசு நிலையாக்கப்படாத கீழ் நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் நேரடி நியமனம் செய்ய தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே 2–ல் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் தனது கடிதத்தில் தேனி மாவட்ட பேரூராட்சிகளில் 1998–1999–ம் ஆண்டு முதல் 2005–2006–ம் ஆண்டு வரை கீழ்க்காணும்படி இளநிலை உதவியாளர்கள் 10–ம் வரித்தண்டலர்கள் 20–ம் ஆக மொத்தம் 30 பணியிடங்கள் காலி ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்:-

| வருடம் | காலியாக உள்ள பணியிடத்தின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | இளநிலை உதவியாளர் | வரிவசூலர் | தட்டச்சர் | மொத்தம் |
| **1998–1999** | **1** | **7** | **–** | **8** |
| **1999–2000** | **–** | **1** | **–** | **1** |
| **2000–2001** | **–** | **2** | **–** | **2** |
| **2001–2002** | **–** | **–** | **–** | **–** |
| **2002–2003** | **3** | **3** | **–** | **6** |
| **2003–2004** | **1** | **2** | **–** | **3** |
| **2004–2005** | **1** | **2** | **–** | **3** |
| **2005–2006** | **4** | **3** | **–** | **7** |
| **மொத்தம்** | **10** | **20** | **–** | **30** |

3. மேற்கண்ட 1998–1999 முதல் 2005–2006 ஆம் ஆண்டு வரை மொத்தம் 30 பணியிடங்கள் காலியாக உள்ளன. அதில் 20 சதவீதம் 6 பணியிடங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு முதுநிலைப் பட்டியலிலிருந்து தகுதி வாய்ந்த 6 பணியாளர்களுக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு பணிப்பதிவேடு மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் முதுநிலைப் பட்டியல் கீழ்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டு வரப்பெற்றது:-

| வ எண் | பெயர் | தற்போது வகித்து வரும் பதவி மற்றும் பேரூராட்சியின் பெயர் | பிறந்த தேதி | எந்த தேதி முதல் பணி புரிந்து வருகிறார் | பணி நியமனம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | வி. அய்யப்பன் | துப்புரவு மேற்பார்வையாளர், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி. | 10.12.1955 | 01.3.1976 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 2 | பி. மூக்கையா | துப்புரவு மேற்பார்வையாளர், தென்கரை பேரூராட்சி. | 02.06.1953 | 03.10.1979 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 3 | பி. பிச்சை, | துப்புரவு மேற்பார்வையாளர், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி. | 22.03.1961 | 01.10.1981 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 4 | எஸ். ஜெயராஜ், | மதகு திறப்பாளர், ஆண்டிப்பட்டி பேரூராட்சி. | 02.06.1958 | 30.12.1987 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 5 | எஸ்.ஐ. ஆரோக்கிய சாமி, | அலுவலக உதவியாளர், சி.புதுப்பட்டி பேரூராட்சி | 10.05.1970 | 04.09.1992 | கருணை அடிப்படையில் பணி நியமனம் | எம்.ஏ., (வரலாறு) |
| 6 | ஆர். வாசுமலை, | துப்புரவு பணியாளர், வீரபாண்டி பேரூராட்சி. | 03.06.1970 | 17.01.1994 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |

4. மேற்படி ஆறு கீழ்நிலைப் பணியாளர்கள் 7 ஆண்டுக்கு மேல் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவறை எழுத்தர் போன்று எழுத்து பதவி வகிப்போர் தவிர்த்து உரிய கல்வித் தகுதியைப்

பெற்றுள்ள அலுவலக உதவியாளர், காவலர், துப்பரவு மேற்பார்வையாளர், துப்பரவு பணியாளர் போன்ற பணியாளர்களுக்கு ஒராண்டு காலத்திற்கு அலுவலக பணி பாதிக்காத வண்ணம் எழுத்து பணியில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.08.1998–ன்படி கீழ்நிலை பணியாளர்களுக்கு முன்னுரிமை பட்டியலின்படி 6 பணியாளர்களை நியமனம் செய்யலாம் என தேனி மாவட்ட குழுத் தலைவரால் 09.11.2006–ல் பணியாளர் தேர்வுக்குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.08.1998–ன்படி அமைக்கப்பட்ட பணியாளர் தேர்வுக்குழு கூட்டம் 09.11.2006–ல் தேனி மாவட்டத்தில் பேரூராட்சிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களுக்கான 30 பணியிடங்களில் 20% விகிதாச்சார அடிப்படையில் 1998–1999ம் ஆண்டு முதல் 2005–2006ம் ஆண்டு முடிய 6 பணியிடங்கள் ஒதுக்கீட்டிற்கு உள்ளாகிறது. பதிவறை எழுத்தர், துப்பரவு மேற்பார்வையாளர், துப்பரவு பணியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் அனைத்து கீழ்நிலை பணியாளர்களும் முன்னுரிமை பட்டியலின்படி 6 பணியாளர்களை நியமனம் செய்யலாம் என தேனி மாவட்ட குழுத் தலைவரால் 09.11.2006–ல் பணியாளர் தேர்வுக்குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே தேனி மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 6 கீழ்நிலைப் பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர்கள் / வரித்தண்டலர்கள் பதவி உயர்வு வழங்கிடுதல் தொடர்பாக உரிய ஆணை வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ எண் | பெயர் | தற்போது வகித்து வரும் பதவி மற்றும் பேரூராட்சியின் பெயர் | பிறந்த தேதி | எந்த தேதி முதல் பணி புரிந்து வருகிறார் | பணி நியமனம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | வி. அய்யப்பன் | துப்புரவு மேற்பார்வையாளர், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி. | 10.12.1955 | 01.3.1976 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 2 | பி. மூக்கையா | துப்புரவு மேற்பார்வையாளர், தென்கரை பேரூராட்சி. | 02.06.1953 | 03.10.1979 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 3 | பி. பிச்சை | துப்புரவு மேற்பார்வையாளர், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி. | 22.03.1961 | 01.10.1981 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு |
| 4 | எஸ். ஜெயராஜ் | மதகு திறப்பாளர், ஆண்டிப்பட்டி பேரூராட்சி. | 02.06.1958 | 30.12.1987 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 5 | எஸ்.ஐ.ஆரோக்கிய சாமி | அலுவலக உதவியாளர், சி.புதுப்பட்டி பேரூராட்சி | 10.05.1970 | 04.09.1992 | கருணை அடிப்படையில் பணி நியமனம் | எம்.ஏ., (வரலாறு) |
| 6 | ஆர். வாசுமலை | துப்புரவு பணியாளர், வீரபாண்டி பேரூராட்சி. | 03.06.1970 | 17.01.1994 | மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |

5. மேற்கண்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதி 16(பி)—ன் பிற்பகுதியின்படி தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது. மேற்படி நேர்வில் தனியர் திரு. ஐ. ஆரோக்கியசாமி, அலுவலக உதவியாளர் அவர்கள் அரசாணை எண்.107, ப.(ம)நி.சீ.(எஸ்) துறை, நாள் 18.08.2009—ன்படி, பள்ளி இறுதி தேர்வு (10ம் வகுப்பு) மற்றும் மேல்நிலை கல்வி (+2) தேர்வு ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றபின் திறந்வெளி பல்கலைகழகங்களின் வழியாக பெறப்படும் பட்டயம் / பட்டம் / முதுகலை பட்டங்களை மட்டுமே பொதுப்பணிகளில் நியமனம் / பதவி உயர்வு பெற அங்கீகரித்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், எனவே இத்தகுதியினை பெறாத தனியரது முதுகலை பட்டப்படிப்பினை குறைந்தபட்ச பொது கல்வித்குதிக்கு இணையாக கருத இயலாது என தெரிவித்து பரிந்துரைக்கப்பட்ட 6 நபர்களில் வரிசை எண்.5—ல் இடம்பெற்றுள்ள திரு. ஐ. ஆரோக்கியசாமி என்பவரை தவிர்த்து மீதமுள்ள 5 நபர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது 11.05.2010—ம் நாளிட்ட கடிதத்தில் தேனி மாவட்ட பேரூராட்சிகளில் 1998—1999 முதல் 2005—2006ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் நிலையில் உள்ள மொத்தம் கணக்கிடப்பட்ட காலிப் பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு தலா 20 சதவிகிதம் இடஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 5 (ஐந்து) நபர்களுக்கு அரசாணை நிலை எண். 150, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.08.1998—ல் தெரிவித்துள்ள நிபந்தனைக்குட்பட்டு இருப்பதாக கருதப்பட்டு இவர்களை பணி மாறுதல் முலம் இளநிலை உதவியாளர் ஆக பதவி உயர்வு அளிக்க, 1954—ஆம் ஆண்டைய தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 16 (பி) யின் பிற்பகுதியின் கீழ் தேர்வாணையம் தனது இசைவினை அளித்துள்ளது. மேலும் அவ்வாறு பணியமர்த்தப்பட்டவர்களின் பணிமூப்பு அவர்கள் அமைச்சுப் பணியில் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது:-

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பிறந்த தேதி | வகிக்கும் பதவி | தேர்தெடுக்கப்பட்ட வருடம் |
|---|---|---|---|
| 1. | வ. அய்யப்பன் 10.12.1955 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 1999 |
| 2. | பி. மூக்கையா 02.06.1953 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 2000 |
| 3. | பி. பிச்சை 22.03.1961 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 2002 |
| 4. | எஸ். ஜெயராஜ் 02.06.1958 | மதகு திறப்பாளர் | 2004 |
| 5. | ர. வாசுமலை 03.06.1970 | துப்புரவு பணியாளர் | 2005 |

6. மேற்காணும் சூழ்நிலையில் மேற்கண்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்று, அரசாணை நிலை எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.08.1998—ன்படி தேனி மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 1998—1999 முதல் 2005—2006ஆம் ஆண்டு வரையிலான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பதவி மொத்தம் கணக்கிடப்பட்ட காலிப் பணியிடங்களில், பேரூராட்சிகளில் பணிபுரியும் பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர், துப்புரவு

பணியாளர்கள் போன்ற கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேலே பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ள ஐந்து நபர்களுக்கு அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் ஏற்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணி காலியிடத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நேரடி நியமனமாக பணியமர்த்தி ஆணை வெளியிடலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறையின் அ.சா.கு.எண். 47569/B1/09, நாள் 12.10.2009–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
சம்பந்தப்பட்ட கீழ்நிலைப் பணியாளர்கள்,
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108 மூலமாக.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம்.
<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை – 6.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை,
சென்னை –9
முதன்மைச் செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (அந2) துறை ,
சென்னை –9.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.